## கொடபொல பிரதேச சபை
## மாத்தறை மாவட்டம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 05 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்தெம்பர் 04 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து கொடபொல பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) தளபாடங்கள் மற்றும் உபகரணக் கணக்கில் மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவுத் தொகை கணக்கின் மீதி ரூபா 902,595 தொகை மிகையாகவும் நீர் களஞ்சிய இருப்பு மீதி ரூபா 996,228 தொகையினால் குறைவாகவும் நிதிக்கூற்றுக்ளகில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) ரூபா 750,000 பெறுமதியான அனின்கந்த பச்சமரம காணியின் பெறுமதியினை மூலதனப்படுத்தி இருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்கான கணக்குகளில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டண வருமானக் கணக்கின் மீதி ரூபா 4,330,915 தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களிலுள்ள கூட்டுத்தொகை ரூபா 152,315,964 தொகைக்கான 6 கணக்கு விடயங்களின் மீதி மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 100,159,271 இற்கான ஒப்பற்ற தன்மை அவதானிக்கப்பட்டது.

#### 1.3.3 தொங்கல் கணக்குகள்

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்ப வேண்டிய குறிப்பிட்ட கட்டணம் தொடர்பாக சீராக்கல் செய்யப்பட்டிருந்த ரூபா 255,674 இற்கான வரவு மீதி மாத்திரம் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தமை மற்றும் முத்திரைக் கட்டணம் தொடர்பாக ரூபா 770,725

இற்கான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையால் தொங்கல் கணக்கில் ரூபா 515,051 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 93,232,230 தொகைக்கான கடன்பட்டோர் மீதியில், 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 37,692,927 இற்கான மீதி உள்ளடங்கியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 72,315,064 தொகைக்கான மீதியில், 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 38,549,840 இற்கான மீதியும் உள்ளடங்கியிருந்தது.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 3,948,783 தொகைக்கான மீதியும், 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 170,061 இற்கான வைப்பு மீதிகள் உள்ளடங்கியிருந்தது.

(ஈ) கடந்த வருடத்திற்க முன்னர் இருந்து தீர்க்கப்படாமல் முன்கொண்டு வந்து காணப்படும் ரூபா 442,997 தொகைக்கான பிடபத்தர பிரதேச சபையின் கடன் கணக்கு, ரூபா 327,733 தொகையான தேசத்தை கட்டியெழுப்பும் வரிக் கணக்கு மற்றும் ரூபா 205,423 தொகைக்கான ஆதனக் கடன் வட்டிக் கணக்கினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் விஞ்சியுள்ள செலவை விஞ்சிய வருமானம் ரூபா 17,796,793 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,854,361 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 14,942,432 இற்கான வளர்ச்சி ஒன்றினைக் காட்டியது. நிதி விளைவுகளில் ரூபா 14,942,432 இற்கான வளர்ச்சிக்கு ஏனைய வருமானங்கள் மற்றும் வருமான உதவி மற்றும் மீளளிப்புக்கள் அதிகரித்தல் முக்கியமாக பாதித்திருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் வருமானத்தின் 70 சதவீத மொத்த மீண்டுவரும் செலவுகள் காணப்பட்டமையால் சபையின் வருமானத்திற்கு ஒப்பாக செலவுகள் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

(ஆ) சுயமாக உருவாக்கிய வருமானத்தை மிகைத்து மீளாய்வாண்டைப் போலவே கடந்த இரண்டு வருடங்களிலும் கணிசமான பெறுமதிகளில் மீண்டுவரும் செலவு அதிகரித்திருந்ததுடன் சபையினால் சுயமாக உருவாக்கிய வருமானம் மீண்டுவரும் செலவுகளை மேவகை செய்வதற்காக எவ்வகையிலும் இயலாத ஒரு நிலைமை ஒன்றினைக் காட்டியது.

**2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்**

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட கடன்பட்டோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்து அறவிடப்படாமல் காணப்பட்ட ரூபா 37,692,927 இற்கான மீதிகள் காணப்படுகின்றமையால் நடைமுறை மற்றும் விரைவு விகிதாசாரங்களின் பிரகாரம் திரவத் தன்மை நிலைமையொன்று காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

**2.4 வருமான நிருவாகம்**

**2.4.1 வீதவரி மற்றும் வரி**

**(அ) வீதவரி**

ஆரம்ப நிலுவை ரூபா 191,521 தொகை ஆகக் காணப்பட்டதுடன், ரூபா 163,551 இற்கான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 355,072 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 226,936 தொகையாகக் காணப்பட்டமையால் 2017 ஜூலை 31 இல் உள்ளவாறு ரூபா 128,136 தொகைக்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது.

**(ஆ) ஏக்கர் வரி**

ஆரம்ப நிலுவை ரூபா 238,090 தொகை ஆகக் காணப்பட்டதுடன், ரூபா 43,670 இற்கான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 281,760 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 70,751 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 211,009 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

**2.4.2 நீர்க் கட்டணம்**

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 1,372,300 தொகையாக இருந்ததுடன் ரூபா 3,280,054 தொகை ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 4,652,354 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 3,852,894 தொகையாகக் காணப்பட்டமையால் 2017 ஜூலை 31 திகதியில் உள்ளவாறு மேலும் ரூபா 799,460 இற்கான மீதியொன்று காணப்பட்டது.

**2.4.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 1,053,942 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 17,654,846 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் பல்வேறு ஏற்பாடுகளின் கீழ் ரூபா 37,800,000 தொகைக்கான 50 வேலைத் திட்டங்கள் செயற்படுத்துவதற்காக வரைவுகள் அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது ரூபா 3,199,156 தொகைக்கான 07 நிர்மாண வேலைகள் மாத்திரம் செயற்படுத்தியிருந்தது.

(ஆ) பிரதேச சபைகளை வலுப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 8,800,000 தொகைக்கான 07 நிர்மாண வேலைகள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 5,300,000 தொகைக்கான 03 நிர்மாண வேலைகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆட்சேர்ப்புத் திட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்த இரண்டாம் தர மட்டத்தில் 01 பதவியில் மற்றும் ஆரம்ப தர மட்டத்தில் 03 பதவிகளில் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மற்றும் 03 பதவிகளில் காணப்பட்ட 12 மிகை பதவிகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ஆதனக் கடனுக்காக உள்ளூராட்சி ஆணையாளரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 205,425 தொகையான வட்டித்தொகை 2016 திசெம்பர் 31 திகதி வரை மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.3 செயற்பாட்டுத் திறமையின்மை**

சபைக்குச் சொந்தமான வாகனத் தொகுதியில் 18 வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் அடங்கியிருந்த போதிலும் அவ்வாகனங்களுக்கு 05 சாரதிகள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

**3.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

**(அ) காணிகள் மற்றும் கட்டிடங்கள்**

2015 ஆண்டின் போது ரூபா 4,500,000 இற்கான செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பல்கருமக் கட்டிடம் மற்றும் 2001 ஆண்டின் போது சபைக்குக் கிடைத்திருந்த ரூபா 3,800,000 தொகைக்கான நிசல உயன கட்டிடம் 2017 ஜூன் 30 வரை பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

**(ஆ) மோட்டார் வாகனங்களும் வண்டிகளும்**

சபைக்குச் சொந்தமான ரூபா 13,774,000 தொகை கிரயத்தையுடைய 03 வாகனங்கள் 09 வருடங்களை விட மிகையான காலமும், ரூபா 914,000 தொகைக்கான டிரக்டர் வண்டி ஒன்று 1997 ஆண்டு முதலும் செயற்படாமல் காணப்பட்ட போதிலும் அவற்றை பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் 2015 ஆண்டின் போது சபைக்கு கிடைத்திருந்த ரூபா 17,649,179 தொகை கிரயத்தையுடைய பெக்கோ இயந்திரம் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது.

**3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

நகர அபிவிருத்தி அதிகார சபையின் 1992 செப்தெம்பர் 30 திகதிய 5/2/2/10(ii) ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் காணிகளை துண்டுகளாக பிரித்து விற்பனை செய்யும் போது அவ் விற்பனை செய்யும் காணியின் அளவில் 10 சதவீதம் அளவு காணி சபைக்கு கிடைக்க வேண்டிய பகுதியாகிய 237.24 பர்சஸ் காணியினை சபை இழந்திருந்தது.

**3.6 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

சபையினால் 2016 ஆண்டின் போது குப்பை முகாமைத்துவத்திற்காக ரூபா 7,077,825 இற்கான செலவு ஒன்று ஏற்பட்டிருந்தது. சேதனப் பசளை 12218 கிலோகிராம் உற்பத்தி செய்வதற்காக ரூபா 3,923,161 தொகை செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் விற்பனை மூலம் ரூபா 117,400 தொகை ஒன்று மாத்திரமே உழைத்திருந்தது.

**3.7 சுற்றாடல்சார் சிக்கல்கள்**

2008 ஜனவரி 25 திகதிய 16/1533 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 25 தொழில்களுக்கான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டியிருந்தது. வர்த்தக வரி செலுத்தல் 41 நிறுவனங்களினால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாமையால் சபைக்கு ரூபா 108,400 இற்கான வருமானம் ஒன்றினை இழந்துள்ளது. அதன் மூலம் சுற்றாடலுக்கு ஏற்படும் பிரதிகூலமான தாக்கத்திற்க எதிராக சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டிலுள்ள 08 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 17,218,086 தொகைக்கான சேமிப்புகளும், 04 வருமான விடயங்களில் நெருங்கியிருக்காத இலக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 12,953,015 தொகையொன்றும் காணப்படல் ஆகிய காரணங்களினால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவியொன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டன.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

இலங்கை அரச நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய த.ப.பா/யஹ/01/ந.ச.லே இலக்கங் கொண்ட சுற்றறிக்கைகளின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்காத போதிலும் சபையினால் நியமிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 473,448 இற்கான சம்பளங்கள் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்